## அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை
## Ang Mo Kio Tamil Methodist Church

***22nd பிப்ரவரி / February 2026 ஞா யிறு ஆராதனை / Sunday Service***

✝ **ஆராதனைக்கு அழைப்பு** — **திரு. ஆனந்த்**
Call to Worship — Mr. Aananth

**இறைவணக்கப்பாடல்** — **பாடகர் குழு**
Introit — Choir

**ஜெபம்** — **திரு. ஆனந்த்**
Prayer — Mr. Aananth

**தொடக்க பாடல்** — **சபையார் இணைந்து**
✝ Opening Song — Congregation

**துக்க பாரத்தால் இளைத்து**

*1. "துக்க பாரத்தால் இளைத்து*
*நொந்து போனாயோ?*
*இயேசு உன்னைத்*
*தேற்றிக்கொள்வார்,*
*வாராயோ?"*

*2. "அன்பின் ரூபகாரமாக*
*என்ன காண்பித்தார்?"*
*" அவர் பாதம் கை விலாவில்*
*காயம் பார்".*

*3. "அவர் சிரசின் கிரீடம்*
*செய்ததெதனால்?"*
*"ரத்தினம் பொன்னாலுமல்ல,*
*முள்ளினால்".*

*4. "கண்டுபிடித்தண்டினாலும்*
*துன்பம் வருமே!"*
*"கஷ்டம், துக்கம், கண்ணீர் யாவும்*
*இம்மையே"*

**மாறி வாசித்தல்** *8***ம் ஞாயிறு** — **சபையார் இணைந்து**
✝ "சங்கீதம் 24" — Congregation

"பூமியும் குடிகளும் கர்த்தருடையது"

Psalter Reading – "Psalm 24"

✝ **தந்தை போற்றி** — **சபையார் இணைந்து**
Gloria Patri — Congregation

**துதி ஆராதனை**
Singspiration

**சாட்சியின் நேரம்**
Time of Testimony

**ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்**
Thanksgiving & Pastoral Prayer

**பரமண்டல ஜெபம்** — **சபையார் இணைந்து**
Lord's Prayer — Congregation

**சிறப்புப் பாடல்** — **பாடகர் குழு**
Special Song — Choir

✝ **காணிக்கைப் பாடல்** — **சபையார் இணைந்து**
Offertory Song — Congregation

**மன்னிப்பு மன்னிப்பு மன்னிப்பு தேவா**

**மன்னிப்பு மன்னிப்பு மன்னிப்பு தேவா**
**மன்னிப்பு மன்னிப்புத் தாருமே - இறைவா**
**மன்னிப்புத் தாருமே இறைவா**

1. ஆண்டவர் ஆன்மாவை விரும்புகின்றார்
மாண்டிட்ட ஆன்மாவைத் தேடுகின்றார்
அண்டிடும் பாவிக்கு அருளுகின்றார் - நேரில்
வேண்டிடும் துரோகிக்கு இரங்குகின்றார்

2. என் சொத்தைத் தந்திடும் என்று கேட்டான்
தன் சொத்தைப் பெற்றவன் பயணமானான்
தன் இஷ்டம் போலங்கே செலவு செய்தான் - அவன்
தன் வாழ்வைப் பாவத்தில் மூழ்கடித்தான்

3. பன்றிகள் மேய்த்தவன் தவிடு உண்டான்
தன் தந்தை அன்பினைக் கனவு கண்டான்
மன்னிப்பு கேட்டங்கே ஓடி வந்தான் - தந்தை
மன்னித்து மகனாக அணைத்து ஏற்றார்.

4. ஆண்டவர் ஞானத்தில் இனிமையுண்டு
கண்டிக்கக் காலத்தைக் கடத்துகின்றார்
கண்டித்து கருணைசொல் கூறுகின்றார் - பாவி
திருந்திட அருட்கொடை வழங்குகின்றார்.

5. குற்றங்கள் இல்லையே என்று சொன்னால்
நம்மைத்தான் ஏமாற்றி நலிந்திடுவோம்
குற்றங்கள் அனைத்தையும் எடுத்துரைத்தால் -தேவன்
குற்றத்தை மன்னித்து வாழ்வளிப்பார்

✝ **பூலோகத்தாரே யாவரும்** — **சபையார் இணைந்து**
Doxology — Congregation

✝ **<u>திருமறைப் பாடம்</u>** — **மிஸ். தாலியா அபிகாயில்**
<u>Scripture Reading</u> — Miss. Talia Abigail

***சங்கீதம் 32 : 1 – 11***

Psalm 32 : 1 – 11

**அருளுரை** — **மறைதிரு. விஜய் ஜோஸப்**
Sermon — Rev. Vijay Joseph

✝ **அர்ப்பணகீதம்** — **சபையார் இணைந்து**
Closing Song — Congregation

**<u>வா, பாவீ, மலைத்து நில்லாதே,வா</u>**

**வா, பாவீ, மலைத்து நில்லாதே,வா**

*1. என்னிடத்தில் ஒரு நன்மையுமில்லையென்*
*றெண்ணித் திகையாதே*
*உன்னிடத்தில் ஒன்றுமில்லை, அறிவேனே.*
*உள்ளபடி வாவேன்*

*2. உன்றனுக்காகவே நானேயடி பட்டேன்.*
*உன் பாவத்தைச் சுமந்தேன்*
*சிந்திய என் திரு ரத்தத்தால் உன் பாவம்*
*தீர்த்து விட்டேன், பாவி, வா,*

*3. கொடிய பாவத்தழலில் விழுந்து*
*குன்றிப் போனாயோ?*
*ஒடுங்கி வருந்தும் பாவிகள் தஞ்சம் நான்,*
*ஒன்றுக்கும் அஞ்சாதே, வா,*

*4. விலக யாதொரு கதியில்லாதவன்*
*உலகை நம்பலாமோ?*
*சிலுவை பாவிகளடைக்கலமல்லோ?*
*சீக்கிரம் ஓடி வாவேன்*

*5. என்னிடத்தில் வரும் பாவி யெவரையும்*
*இகழ்ந்து தள்ளேனே;*
*மன்னிய மேலோக வாழ்வை அருள்வேனே,*
*வாராயோ, பாவீ?*

**அறிவிப்புகள்**

Announcements

✝ **<u>மனப்பாட வசனங்கள்</u>** — **சபையார் இணைந்து**
<u>Memory Verses</u> — Congregation

***சங்கீதம் 6 : 4***

Psalm 6 : 4

***4. திரும்பும் கர்த்தாவே, என் ஆத்துமாவை விடுவியும்; உம்முடைய கிருபையினிமித்தம் என்னை இரட்சியும்.***

✝ **முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்**
Closing Prayer & Benediction

✝ **ஆசீர்வாதப் பாடல்**
Benediction Song

✝ **சபையார் நிற்கவும்** ⁄ Indicates Congregation standing